DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 143/2022 Crime No. 65/2022 Station Ammapet

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1/LW-1- இருசப்பன் | Village | |
| Father Name | கொளந்த | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.09.2024 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை-**

நான் தண்ணீர்பந்தல்பாளைத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஆஜர் எதிரியை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். தேதி மற்றும் வருடம் நினைவில்லை, சுமார் 2-1/2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், ஆஜர் எதிரி இரவு 02.00 மணியளவில், மதுபோதையில் அவரது மனைவியை ஆபாச வார்த்தைகளால் சத்தம் போட்டு திட்டிக் கொண்டிருந்தார். நான் பக்கத்து வீட்டு நபர் என்ற முறையில் அவரது வீட்டிற்குச் சென்று எதிரியை சமாதானம் செய்ய முயற்சி செய்தேன், எதிரி மதுபோதையில் எனது பேச்சைக் கேட்காமல் அவர் கையில் வைத்திருந்த அரிவாளை கொண்டு எனது வலதுபுற முகத்தில் சுமார் 5 செ.மீ அளவில் கிழித்துவிட்டார்.

இன்று நீதிமன்றத்தில் காட்டப்படும் அரிவாளால்தான் என்னை எதிரி தாக்கினார். **அரிவாள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் சிகிச்சைக்காக முதலில் குருவரெட்டியூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு, பின்னர் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கும், எதிரிக்கும் இடம் சம்பந்தமாக பல வருடங்களாக முன்விரோதம் இருந்து வருகிறது. நான்தான், எதிரி எனது வீட்டை தாண்டிப் போகும்போது அந்த பாதையில் முள் மற்றும் கம்பி போட்டு இடையூறு செய்து வந்தேன் என்று சொன்னால், சரியல்ல.

இரவு சுமார் 02.00 மணியளவில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான்தான், இரவு வேளையில் தடுமாறி முள் வேலியில் விழுந்து அடிப்பட்டுவிட்டு, எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

இன்று நீதிமன்றத்தில் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட சான்றுப் பொருளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால், சரியல்ல. நீங்கள் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால், சரியல்ல.